விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 01 வெள்ளிக்கிழமை (15.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 178

ராம்கோ
MADRAS CEMENTS LTD.
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## வெளிமாவட்ட ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டம் இடைநிறுத்தம்

### கல்வி வலயப் பணிகள் இன்று வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்காலிக நியமனம் வழங்கக் கோரி வெளிமாவட்டத்தில் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களால் யாழ்.வலயக் கல்வித் திணைக்களத்திற்கு முன்பாக நடத்தப்பட்ட மறியல் போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைய யாழ்ப்பாணத்தில் தமக்கு தற்காலிக நியமனம் வழங்கவில்லை எனக் குறிப்பிட்டு கடந்த வாரம் முதல் வெளிமாவட்ட ஆசிரியர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (06 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலிக்கொம்மின் பங்குகளை மலேசியாவுக்கு விற்கத்தடை

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக்கொம்மின் பங்குகளை மலேசிய நிறுவனத்திற்கு விற்க உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

ரெலிக்கொம்மின் பங்குகளை மலேசியாவின் மேக்ஸிஸ் நிறுவனத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. இதனை எதிர்த்து முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் அரசாங்கத்தின் முடிவுக்கு இடைக்காலத் தடை விதித்ததுடன் இந்த விவகாரம் குறித்த அமைச்சரவை முடிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய (06 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச நாடுகள் அனைத்தும் இலங்கையைக் கைவிட நேரிடும்

### றொய்ட்டர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில் அதன் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. இலங்கைக்கு சர்வதேச உதவிகள் தேவை. ஆனால் அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள் அதனைத் தனிமைப்படுத்தும் நிலைக்குத் தள்ளியுள்ளதாக இராஜதந்திரிகளும் ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கையை சர்வதேச நாடுகள் கைவிடும் நிலை ஏற்படலாம் என றொய்ட்டர் தெரிவித்துள்ளது. இலங்கை தொடர்பாக ஆய்வு நடாத்திய பின் றொய்ட்டர் இதனைத் தெரிவித்துள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நிறுவனப் பணியாளர் மீது கடற்படையினர் துப்பாக்கிச் சூடு

(திருகோணமலை)

திருகோணமலையில் மெர்சி கோர்பஸ் என்ற அனைத்துல அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிய பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த அந்தோனியோ மகாலக்ஸ் மீது கடற்படையினர்தான் துப்பாக்கிச் சூடு நடத்தியது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியுள்ளதாவது,

திருகோண்மலையில் கடற்படை முகாமை அண்மித்த பகுதியில் இரவு நேரத்தில் அந்நபர் சென்று கொண்டிருந்தார். கடற்படையினர் விடுத்த எச்சரிக்கையினை அந்நபர் பொருட்படுத்த (06 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்குப் பாடசாலை மட்டப் பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்கும் முறை குறித்து வர்த்த

## யுத்த நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்தால் சர்வதேச ஆதரவை அரசு இழக்க வேண்டி வரும்

### ஜே.வி.பி.கூறுகிறது

(கொழும்பு)

சர்வதேசத்தில் நாங்கள் தங்கியிருக்கவில்லை என்று அரசாங்கம் கூறியுள்ளது. அப்படியானால் ஏன் அரசாங்கம் அமெரிக்

என்னதான் கூறினாலும் அரசாங்கம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய

வில்லை என்றால் போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யுமாறு சவால் விடுக்கின்றோம் என்று ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த

கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்குப் பாடசாலை மட்டப் பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்கும் முறை குறித்து வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ச-5)

## ஜே.வி.பி. கூறுகிறது

(கொழும்பு)

சர்வதேசத்தில் நாங்கள் தங்கியிருக்கவில்லை என்று அரசாங்கம் கூறியுள்ளது. அப்படியானால் ஏன் அரசாங்கம் அமெரிக்காவுடன் இலங்கைக்குப் பாதகமான முறையிலான பாதுகாப்பு உடன்படிக்கையைச் செய்து கொள்ள வேண்டும்.

என்னதான் கூறினாலும் அரசாங்கம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அடிபணிந்த நிலையிலேயே செயற்படுகின்றது.

சர்வதேசத்திற்கு அரசாங்கம் அடிபணியவில்லை என்றால் போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யுமாறு சவால் விடுக்கின்றோம் என்று ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.


அரசாங்கம் சர்வதேச நாடுகளில் தங்கியிருக்கவில்லை (06 ஆம் பக்கம் பார்க்க)

# செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஜெனீவாவில் ஜனாதிபதியுடன் பேச்சு

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மகிந்த ராஜபக்ஷவை ஜெனீவாவில் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்பில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் இரண்டு பணியாளர்கள் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை குறித்து விரிவாகப் பேசப்பட்டதுடன் தமது ஆதங்கத்தையும் அவர்கள் வெளியிட்டனர்.

செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டமை குறித்து இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரிலேயே இச்சந்திப்பு நடைபெற்றதாக சர்வதேச செஞ்சிலுவைச் (06 ஆம் பக்கம் பார்க்க)



# இலங்கையில் மனித உரிமை மீறல்கள் உடனடியாக கண்காணிக்கப்பட வேண்டும்

## மனித உரிமைகள் ஆணையக அதிகாரி வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் நிலவிவரும் மனித உரிமைகள் தொடர்பான கவலைகள் உடனடியாக கவனிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் மனித உரிமைகள் ஆணையகத்தின் உயர்ஸ்தானிகர் லூஜி ஆபர் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையகத்தின் உயர்ஸ்தானிகர் லூஜி ஆபரை நேற்றைய தினம் ஜனாதிபதி சந்தித்த போதே இவ்விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் லூஜி ஆபர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமையினை நேரில் பார்வையிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். லூஜி ஆபர் இலங்கைக்கு வருவதில் எந்தவிதமான சிக்கல் எதுவும் கிடையாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தளபதியின் வீட்டில் தீ விபத்து

(கொழும்பு)

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதனையடுத்து பல தீயணைப்பு வண்டிகள் உடனடியாக சரத் பொன்சேகாவின் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டு தீயணைக்கப்பட்டது. மின்கசிவின் காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டிருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐரோப்பிய பிரதிநிதிகளுடன் தமிழ்க் கூட்டமைப்பு சந்திப்பு

## இலங்கை நிலை குறித்து விரிவாக ஆராய்வு

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்து அந் நாடுகளின் வெளிவிவகார அமைச்சின் ஆசிய நாடுகளுக்குப் பொறுப்பான பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக உரையாடியுள்ளார்.

நோர்வேயில் இலங்கைக்கான சிறப்பு சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயரைச் சந்தித்து உரையாடிய எஸ்.ஜெயானந்தமூர்த்தி நோர்வேயின் வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் மரினா வெய்டால் கில்லியைச் சந்தித்தும் பேசினார்.

டென்மார்க் வெளிவிவகார அமைச்சின் ஆசியப் பிராந்தியத்திற்கான அமைச்சின் ஆலோசகர் லைவ் கிறிஸ்ரென்சன், பின்லாண்ட் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பிராந்திய முகாமையாளர் மரிரா மெரன்ரோ, சுவீடன் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் மனித உரிமைகள் பிரிவின் தூதுவர் ஜான் அக்சல் நோர்லாண்டர், தெற்காசியாவுக்கான தலைமை அதிகாரி வில் கெல்ம்வென் வாம்ஸ்ரெல்ட் ஆகியோரை அந்தந்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சில் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

மேலும் அந்நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் போன்றோரையும் சந்தித்து உரையாடினார். இச் சந்திப்புக்களின் போது வடக்கு-கிழக்குப்பிரதேசத்தில் தற்போது நடத்தப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் ஆட்கடத்தல்கள், கைதுகள், படுகொலைகள் ஆகியவை குறித்து விரிவாக எடுத்துக் கூறியுள்ளதுடன் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் நாளுடன் குடாநாட்டுக்கான ஏ-9 பாதையை அரசு மூடியுள்ளதுடன் அதனால் குடாநாட்டில் ஆறு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் திறந்தவெளி சிறைச்சாலை போன்ற நிலையில் வாழ்ந்து வருவதுடன் அவர்கள் அனைத்து அடிப்படை வசதிகளையும் இழந்த நிலையில் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் உள்ளனர் என்றும் விளக்கினார்.

மேலும் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அரச படை நடவடிக்கை என்ற பெயரில் அப்பாவி பொது மக்களின் குடியிருப்புக்கள் மீது வான்வெளி மற்றும் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி இரண்டு இலட்சத்து ஐப்பதாயிரம் பேர் வரையில் உள்நாட்டில் இடம் பெயர வைத்துள்ளது.

அப்பாவி மக்கள் சுதந்திரமாக வாழ்ந்த பகுதி இன்று படை நடவடிக்கை காரணமாக முற்றாக அழிந்துள்ளதுடன் அவர்களின் சுதந்திரமான வாழ்வும் பாழாகியுள்ளது. இப் படை நடவடிக்கையின் மூலம் கிழக்கில் விடுதலைப்புலிகளின் பல பிரதேசங்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாக இலங்கை அரசு கூறி வருகின்றது.

ஆனால் விடுதலைப்புலிகள் மக்களுக்கு இழப்பு ஏற்படக்கூடாது என்பதுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மதித்தும் அனைத்து உலக சமூகத்தில் நம்பிக்கை வைத்துமே தமது பிரதேசங்களிலிருந்து பின்வாங்கியிருந்தனர். ஆனால் இதனை ஒரு பலவீனமாக அரசு நினைத்து தாம் வெற்றி பெற்றுள்ளதாக மார்தட்டி வருகின்றது.

இந்நிலை தொடருமானால் தமிழ் மக்களை காப்பாற்றும் வகையில் விடுதலைப் புலிகள் கடுமையான போரை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கடந்த கால அனுபவங்கள் மற்றும் வரலாறுகளைக் கவனத்தில் கொண்டு இலங்கை அரசு இனப்பிரச்சினையை சமாதான பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு முன்வரப் போவதில்லை. இதனால் தமிழ் மக்கள் அரசில் நம்பிக்கை இழந்து விட்டனர்.

எனவே தமிழ் மக்களின் பூர்வீக தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்கை பிரிந்து தனியரசு அமைப்பதனைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு மார்க்கம் எதுவுமில்லை. இதற்கு அனைத்துலக சமூகம் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும் என்றும் இச் சந்திப்புக்களின் போது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி வலியுறுத்தினார். (ச-5)

## நந்தாவில் அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் விழாவில் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ச)



இலங்கை வங்கி யாழ்.மாவட்ட விளையாட்டு நலன்புரி கலை இலக்கிய மன்றத்தினால் கடந்த 10ஆம் திகதி வெளியீடு செய்யப்பட்ட 'ஊக்கி' சஞ்சிகையின் வெளியீட்டு விழாவில் வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் வி.ஏ.அருமைநாயகத்திடம் இருந்து யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை சிறப்புப் பிரதி பெறுவதையும், மேடையில் பேராசிரியர் எம்.நடராசசுந்தரம், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன், முன்னாள் இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

SATS - TECH 7- வது ஆண்டில்...
இதோ! விரல் நுனியில் உலகை உங்கள் வசம் தருகின்றோம். சாதாரண டீவி அன்ரனாவை பொருத்தும்விலைக்கு அண்மையாக சன் டீவி/சன் நியூஸ்/ஜெயா டீவி/பொதிகை, DD Sports, Head Lines Today, DD 1 உட்பட்ட 44 சனல்கள் Digital DVD தரத்துடன் மாதாந்த கட்டணம் எதுவுமின்றி கண்டு களிக்கலாம்.
KU BAND டிஸ் அன்ரனா சிஸ்டம் உத்தரவாதத்துடன் Rs.9000/=ல் இருந்து
உத்தரவாதம் நிபந்தனைக்கு உட்பட்டது
மேலதிக விபரங்களுக்கு:-
SATS-TECH ENGINEERS
இல.182, கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டி சேச் அருகில்,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.
Phone:- (021)222 5908
Hot Line 0777 710785
(c-103)

## இலங்கையர் இருவருக்கு சவுதியில் மரண தண்டனை

(கொழும்பு)

பெண் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்த குற்றத்திற்காக இரண்டு இலங்கையர்களுக்கும் இவர்களுடன் சம்பந்தப்பட்ட மேலும் ஒரு இந்தியருக்கும் சவுதி அரேபிய நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

இதனைத் தவிர ஐந்து இலங்கையருக்கு ஐந்து வருட சிறைத் தண்டனையும் 500 கசை அடிகளையும் வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-3)

## நற்பண்பு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் புண்ணிய கிராம வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் ஒரு நாள் நற்பண்பு செயலமர்வு நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு சாவற்காடு ஞான வைரவர் அறநெறிப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (அ)

## விடுதலைப்புலிகளும் கருணா குழுவும் சிறுவர்களை படையில் சேர்க்கின்றனர்

### ஐ.நா.சபை குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப்புலிகளும் கருணா தரப்பினரும் சிறுவர்களை படைக்கு சேர்ப்பதன் மூலம் கடுமையான முறையில் சிறுவர்களின் உரிமைகளை மீறுவதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் ஆயுத போராட்டத்தில் சிறுவர்கள் சம்பந்தமான செயற்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் உடனடியாக இரண்டு தரப்பினரும் சிறுவர்களை அவர்களின் பெற்றோர்களிடம் அனுப்பிவைக்க வேண்டுமென இச் செயற்குழு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை இரு தரப்பினரது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் குறித்த சிறுவர்களை அனுமதிக்க வேண்டுமென்றும் ஐக்கிய நாடுகளின் செயற்குழு கோரியிருக்கின்றது.

இக் கோரிக்கை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் கருணா தரப்பினருக்கும் அறிவிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபைச் செயலரை சிறுவர்கள் சம்பந்தமான செயற்குழு கேட்டுள்ளது.

அதனை இரு தரப்பினரும் செவிபடுத்தாமற்போனால் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுமென செயற்குழு எச்சரித்துள்ளது. (ச-3)

## கொழும்பு துறைமுகத்தில் தாக்குதல் நடத்துவதற்கு புலிகள் பாரிய திட்டம்

### புலனாய்வு பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் மீது தாக்குதல் நடத்த விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தெஹிவளை மற்றும் வெள்ளவத்தை கடற்பரப்பின் ஊடாக துறைமுகப் பகுதிக்குள் இரண்டு வைபர் படகுகள் மூலம் நுழைந்து தாக்குதல் நடத்துவதற்கும் அதன் பின்னர் தரை மார்க்கமாக வான்கள் மூலம் தற்கொலை தாக்குதல் மேற்கொள்வதற்கும் விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதுவே இந்த தாக்குதலின் பிரதான நோக்கமாகும். அத்துடன் இராணுவத் தினரை நிலைகுலையச் செய்து துறைமுகத்தை கைப்பற்றி அங்குள்ள பாரஊர்தி வாகனங்களை தீயிட்டு கொளுத்தி பாரிய நாசகார வேலையில் ஈடுபடவும் விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் கொழும்பில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தி அதன் மூலம் தமது பலத்தை வெளிப்படுத்த விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளதாகவும் இத் திட்டம் பூரணமான நிலையில் உள்ளதாகவும் இவ் வருடத்தின் நடுப்பகுதியில் மேற்படி தாக்குதல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருப்பதாகவும் புலனாய்வு பிரிவினர் தெரியப்படுத்தியுள்ளனர். (ச-5)

## சீமெந்து கடத்திய படகு பிடிபட்டது

(மன்னார்)

மன்னார் பேசாலை கடற்பரப்பில் சீமெந்து ஏற்றிச் சென்ற படகு நேற்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதியில் மூன்று படகுகளில் ஐந்து பேர் சீமெந்துப் பக்கற்றுக்களை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு விநியோகிப்பதற்காக கடத்திச்செல்ல முயன்றுள்ளதாக தமது விசாரணை மூலம் தெரியவருவதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் படகுகளில் இருந்த ஐந்து பேரும் விடுதலைப்புலி சந்தேக நபர்கள் என்ற வகையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## சடலத்தை அடையாளம் கண்டு பொறுப்பேற்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள மூன்று சடலங்களையும் அடையாளம் கண்டு உரியவர்களை பொறுப்பேற்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுள்ளார். அடையாளம் காணப்படாத நிலையிலுள்ள மூன்று சடலங்களும் சுமார் 20 முதல் 28 வயது வரையானவை என பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### மணமகள் தேவை


17.05.1965 ஆம் திகதி கேட்டை நட்சத்திரம் 2-ம் பாதம், விருச்சிக ராசியில் பிறந்தவரும், திருக்கணித பஞ்சாங்கப்படி மூன்று சுற்றுக்கும் மொத்தம் 523 கிரகபாவமும், 4-ல் செவ்வாயும் இடப லக்கினமும் கொண்ட 5'4" உயரமான அரச சேவையில் உள்ளவருக்கு ஏற்ற மணமகள் தேவை. அரச உத்தியோகம் விரும்பத்தக்கது. (விளம்பர இல. 131, வலம்புரி, இல.3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் றோட் என்ற விலாசத்திற்கு விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவும். (131)

# நல்லூர் புனித நகராக்கப்படல் வேண்டும்

எமது நாட்டில் உள்ள முருகன் திருத் தலங்களுள் நல்லூர் கந்தசுவாமி கோவில் முக்கியதோர் இடத்தைப் பெறுகின்றது.

தமிழ் மக்களின் வரலாற்றுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டது. கதிர்காமம், செல்வச்சந்நிதி, வெருகல், உகந்தை ஆல யங்கள், கிராமிய சூழலில் அமைந்திருக்க நல்லூர் ஆலயம் நகர் சூழலில் அமைந்திருப் பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதனால் இங்கு வரும் அடியார்களுக்கு சாதாரண நாட்களிலோ, திருவிழாக்காலங் களிலோ த்ங்குவதற்கு மடங்கள் அல்லது



தங்குமிட வசதிகள் அமைத்துக்கொடுக்க வேண்டிய தேவை பெரியளவில் ஏற்பட வில்லை. எனினும் விழாக்காலங்களில் அடி யார்கள் ஆலயத்திற்கு இலகுவாக சென்ற டையக் கூடிய பாதை ஒழுங்கும், போக்கு வரத்து வசதிகளும் மற்றும் அடிப்படை வச திகளும் இருக்க வேண்டும்.

அடியார்கள் கோவில் சூழலில் வசதியா கத் திரண்டு நிற்பதற்கு அகலமான வெளி வீதிகளும், ஒழுங்கமைக்கப்பட்ட கவர்ச்சி யான புனிதமான சிறந்த நிலப்பரப்பும் தேவை யாகும்.

இலங்கையில் பல நகரங்கள் இன்று புனித நகரங்களாக விருத்தி செய்யப்பட்டுள் ளன. கதிர்காமம், மகியங்கனை, அனுராத புரம் போன்றன இவ்வகையில் அடங்கும்.

திருக்கோணேஸ்வரத்தை புனித நகர மாக மாற்ற எடுத்த முயற்சி கைகூடவில்லை. இதேபோல் திருக்கேதீஸ்வரமும் புனித நக ராக்கப்படவில்லை. நல்லூர் ஆலயமும் இதன் சுற்றுப்புறமும் சமய நோக்கிலும், வரலாற்று நோக்கிலும் தமிழர்களின் முக்கியமான தல மாகும். இதனால் இப் பிரதேசத்தை ஒரு புனித நகரமாக வரையறை செய்து இதன் சமூக-பொருளாதார, பௌதிக பண்புகளை அபி விருத்தி செய்வது தேவையாகிறது. இப்புனித நகரப்பகுதிகளின் எல்லைகள் ஆய்வுகள் மூலம் தீர்மானிக்கப்படலாம்.

ஒவ்வொரு நகரத்திலும், அதன் சமூக, கலாசார, பொருளாதார செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அங்கு நடைபெறும் விழாக்கள் உதவியாக அமைகின்றன.

உதாரணமாக கண்டி நகரில் நடை பெறும் வருடாந்த எசல பெரஹறா அந் நக ருக்கு சமய, கலாசார முக்கியத்துவத்தை கொடுப்பதுடன் சர்வதேச உல்லாசப் பயணி களையும் ஈர்ப்பதாக உள்ளது. இது இந் நக ரின் பொருளாதார செயற்பாட்டில் குறிப்பிடத் தக்க பங்கு வகிப்பதைக் காணலாம்.

இதேபோன்று நல்லூர் ஆலயத்தின் வருடாந்த உற்சவமும் யாழ்ப்பாண நகரின் சமய, கலாசார, பொருளாதார செயற்பாடுக ளில் முனைப்பானதொரு இடத்தை வகிக் கக் கூடிய வழியை நாம் உருவாக்கலாம்.

சமாதான காலத்தில் இலங்கை சைவ அடியார்கள் மாத்திரமல்ல சர்வதேச ரீதியாக வாழும் முருகனடியார்கள் இங்கு வருவதை தூண்டும் முறையில் செயற்பாடுகளை முன் னெடுக்கமுடியும்.

ஆலயச்சுற்றாடலின் இன்றைய பௌ திக சூழ்நிலை மேலும் அபிவிருத்தி செய்யப் படும் போது தான் உற்சவத்தின் சிறப்பும், ஆலயச் சூழலின் பண்பும் பெருமளவுக்குப் பொலிவு பெற்று விளங்கும். நல்லூர் சுற்றா டலில் அமைந்துள்ள வீடுகள், கட்டடங்கள் ஆகியன சைவசமய கலாசார விழுமியங் களையும், திராவிட கட்டடக் கலையையும் பிர திபலிப்பதாக அமைவது சிறந்ததாகும்.

இன்று இப்பண்புகள் காணப்படினும் மென்மேலும் விருத்தி செய்யப்பட வேண் டும். நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழலில் நல்லூர் சிவன் கோவில் மற்றும் பல சிறு கோவில்கள் அமைந்துள்ளன. திருஞான சம்பந்தர் ஆதீனம் இங்கு அமைந்திருப்பது முக்கிய சிறப்பம்சமாகும்.

மேலும் மாநகரசபை கல்யாண மண்ட பம் (தற்பொழுது அலுவலகமாக பயன்படு கின்றது), திருஞானசம்பந்தர் அதீன மண்ட பம், துர்க்கா மணிமண்டபம் ஆலயச் சூழ லில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கன. இம் மண்டபங்களில் விவாகங்கள் மற்றும் சமய, கலாசார நிகழ்வுகள் நடைபெறுவது இப் பிரதேசத்தின் முக்கியத்துவத்தை அதி கரித்த வண்ணம் இருக்கின்றன.

இதனால் போக்குவரத்துப் பிரச்சினை, வாகன தரிப்பிடங்களை அமைப்பதிலும் பிரச் சினைகள் உருவாகியுள்ளன. நல்லூர் ஆல யச் சூழலின் பாதை வலைப் பின்னலை நோக்குமிடத்து, பாதைகளின் அடர்த்தி போதுமானதாக இல்லை. ஆலயத்தைமைய மாகக்கொண்டு சுற்றுவடிவிலோ, சதுர வடி விலோ, கதிர்வீசல் வடிவிலோ அமைய வில்லை. பொருத்தமான வீதி வலைப் பின் னல் குறிப்பாக திருவிழாக் காலங்களில் மக் களின் போக்குவரத்தை இலகுபடுத்தும். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும், அத னைச் சூழ அமைக்கப்பட்டுள்ள வீதி ஒழுங் கமைப்பும் சிறந்த நகர்த் திட்டமிடலைச் சித் தரிப்பதாக நகரத் திட்டமிடலாளர்கள் கருது கின்றனர்.

இங்கு பாதைகள் ஆலயத்தை மையமா கக்கொண்டு அடுக்கடுக்காக அமைக்கப்பட் டிருப்பதால் மக்கள் இலகுவாக ஆலயம் சென் றடைய முடிவதுடன் நகரச் செயற்பாடுகளும் ஒழுங்காக இடம்பெற வழிவகுக்கின்றன. இதே போன்று நல்லூர் ஆலயத்தைச் சுற்றியும் போக்குவரத்து விருத்தியாக்கப்பட்டு இங்கு வரும் அடியார்கள் நடமாட்டத்தை ஒழுங்க மைக்கலாம்.

அண்மையில் சங்கிலியன் வீதிக்கும் பருத் தித்துறை வீதிக்கும் இடையில் அமைக்கப் பட்ட வீதி இதற்கு உதவுவதாக அமைகின் றது. போக்குவரத்தை மேலும் சீர் செய்ய பின் வரும் வீதிகள் அமைப்பதும், விருத்தி செய் வதும் அவசியமாகின்றது.

1. கோவிலின் வடக்கு வீதியிலிருந்து சங் கிலியன் வீதிவரை ஒரு பாதை அமைய வேண் டும். கோவில் வீதியிலிருந்து கை ஒழுங்கை கள் ஆரம்பித்தாலும் அவைகள் குருட்டு ஒழுங் கைகளாக (Cul-de-sac) இருக்கின்றன.

2. அரசடிச் சந்திக்கும், கோவில் வீதிக் கும் (நல்லை ஆதீனம்) இடையில் இருந்து ஒரு அகலமான பாதை மேற்கு நோக்கிச் சென்று, அரசடி - திருநெல்வேலி வீதியை தொடக்கக் கூடியதாக அமைக்கப்பட வேண் டும்.

3. நல்லூர் கோவில் தெற்கு வீதியிலி ருந்து செட்டித்தெருவை அடையக்கூடிய தாக ஒரு பாதை அமைய வேண்டும்.

வாழ்நாள் பேராசிரியர்
பொன். பாலசுந்தரம்பிள்ளை
(Ph.D.,Durham)

4. நல்லூர் கோவில் முகப்பிலும், கல் யாண மண்டபத்திற்கு அண்மையிலும் பருத் தித்துறை வீதியிலுள்ள L வளைவுகள் போக் குவரத்துக்கு இடைஞ்சலாகவும், விபத்துக் கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டிருப்பதாலும் இவ் வளைவுகளின் கடினத்தன்மை குறைக்கப்பட வேண்டும் அல் லது மாற்றுப் பாதைகள் அமைத்து போக்கு வரத்துக்கள் திசை திருப்பப்படல் வேண்டும்.

5. நல்லூர் கோவில் முகப்பிலிருந்து முத் திரைச்சந்தை முடக்குவரை பருத்தித்துறை வீதி அகலமாக்கப்பட்டு, பாதசாரி நடை பாதை கொண்ட அகலமான வீதியாக மாற்ற ப்படின் கோவிலின் முகப்புப் பார்வை தூரத் தெரிவதுடன், வீதி மிகவும் அழகாகவும், மக் கள் போக்குவரத்து வசதியாகவும் மாறும்.

ஆலய வீதி அடியார்களை உள்ளடக்கக் கூடியதாகவும் தேர், சப்பறம் போன்ற உ தங்கள் தடங்கலின்றி இல[illegible]ாக ஓடக்கூடி யதாகவும் அமைந்திருப்பது [illegible]ட்டாய தேவை யாகும்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதிகள் ஓரளவுக்கு அகலமாக இருப்பினும் அதன் மேற்கு வீதி குறிப்பாக பருத்தித்துறை வீதிக்கு வடக்குப்பகுதி மிக ஒடுக்கமாக அமைந்திருப் பது சுவாமி வீதிவலம் வருவதற்கும் அடியார் கள் நடமாட்டத்திற்கும் இடைஞ்சலாக, வசதி குறைந்ததாக இருக்கின்றது.

இதனால் சன நெரிசல் ஏற்படும் நிலை தென்படுகின்றது. ஆகவே இவ் வீதி அகல மாக்கப்படுதல் நல்லது.

இதேபோல் கிழக்கு வீதியும் மக்கள் பெரும் எண்ணிக்கையில் நிற்பதற்கு போதாதுள் ளது. குறிப்பாக தேர் முட்டியைச் சூழ மக்கள் நடமாட போதியளவு இடவசதியில்லாது இருப் பது குறைபாடாகவுள்ளது. இதனால் கிழக்கு வீதி குறிப்பாக தேர்முட்டியைச் சூழவுள்ள



பகுதி அகலப்படுத்த வேண்டும். ஆலய உற் சவ காலங்களில் வர்த்தக, கலாசார, கல்வி கண்காட்சி செயற்பாடுகள் இங்கு இடம் பெறுவது வழக்கம்.

அடியார்களின் ஆலய வழிபாடு, ஆல யச்சூழலில் நடமாட்டம் போன்றவற்றுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருப்பதற்கு மேற் குறித்த செயற்பாடுகள் கோவிலிலிருந்து சற் றுத்தூரத்தில் இடவமைவு பெறுவது நல்லது. பிராமண குளப்பகுதியில் அண்மைக் காலத் தில் ஏற்பட்ட குளிர்பான நிறுவனங்களில் விருத்தி ஏற்புடையதாகும்.

இதேபோல் கிழக்கே சங்கிலியன்- பருத் தித்துறை குறுக்கு வீதியில் வர்த்தக செயற் பாடுகள் இடம்பெறலாம்.

வர்த்தக செயற்பாடுகள் சற்று தூரத்தில் இடம்பெறும் பொழுது கோவிலின் புனிதத் தன்மையைப் பாதிக்காது. மேலும் நல்லூர் கோவிலுக்கு முன்பாக சுற்றுமதிலுடன் கூடிய மண்டபம் அமைந்துள்ளது. பெருமளவு மக் கள் கூடும் இடத்தில் மண்டபம் இருந்தாலும், சுற்று மதில் இருப்பது விரும்பத்தக்கதல்ல. சன நெரிசலால் விபத்துக்கள் ஏற்படலாம்- ஏற்பட்டதும் உண்டு.

மேற்குறித்த கருத்துக்கள் கருத்தில் எடுக் கப்பட்டு நல்லூர் புனித நகரமாக்கப்படின், நல்லூர் கந்தசுவாமி கோவில், நல்லூர் சிவன் கோவில், நல்லூர் திருஞானசம் பந் தர் ஆதீனம் மற்றும் பலசிறு கோவில்கள், சமய நிறுவனங்களைக் கொண்ட நல்லூர் சிறப் புப் பெறுவதுடன் சைவத் தமிழ் மக்கள் தங் கள்நீண்ட நாள் விருப்பம் கிட்டியதாக மகிழ் வர்.

# திருநீற்று மகிமை !

சிவ சின்னங்களில் மிக முக்கியமானவை திருநீறு, உருத்திராட்சம், சடைமுடி ஆகிய மூன்று பொருட்கள். மூர்த்தி நாயனார் பாண் டிய நாட்டின் பேரரசன் ஆன பின்பும் திரு நீறு, உருத்திராட்சம், சடைமுடி ஆகிய மூன் றும் கொண்ட அடியார் கோலத்துடனேயே ஆட்சிபுரிந்தார்.

இதை மும்மையால் உலகு ஆண்ட மூர்த் திக்கும் அடியேன் என்று சுந்தரமூர்த்தி சுவா மிகள் போற்றுகின்றார்.

இந்த மூன்று புண்ணிய பொருட்களில் திருநீறு என்பது புனிதமான பஸ்மமான சாம் பல். இது விபூதி என்று அழைக்கப்படுகின் றது. விபூதியின் பெயரால் புகழ்பெற்றவர் அப்பூதியடிகள். பூதியார் என்பவர் பழங் காலப் புலவர்களில் ஒருவர். விபூதியின் மகிமை யைத் திருநீறு என்ற தனியதிகாரத்தில் திரு மந்திரம் போற்றுகின்றது.

மூன்று வயதிலேயே முக்காலமும் உணர்ந்த உலக அதிசயமான திருஞான சம்பந்தப் பெருமான் திருநீற்றுப் பதிகம் என்ற தனிப்பதிகத்தில் விபூதியின் மகிமையை போற்றியுள்ளார்.

பரமன் புரியும் படைத்தல், காத்தல், அழித் தல் போன்ற மூன்று தொழில்களையும் ஆண், பெண் இருபால் (அலி) என்ற மூன்று வகை உயிரினங்களையும் குறிக்கும் வகை யில் திருநீறு மூன்று பட்டைக்கோடுகளாக இடப்படுகின்றது.

பரமசிவன் என்ற ஆண்பாலாக, தாயு மானவர் என்ற பெண்பாலாக, அர்த்தநாரீ ஸ்வரர் என்ற இருபாலாக, லிங்கம் என்ற பல் வேறு பால் வேறுபாடுகளுக்கும் அப்பாற் பட்ட பரம்பொருளாக விளங்கும் சிவமெய்ப் பொருளுக்கு அபிஷேகம் செய்யப்படும் புனித மான பொருளாக விபூதி விளங்குகின்றது.

விபூதியானது உடலின் வெப்பத்தைத் தணிக்கின்றது. உள்ளத்திற்குக் குளிர்ச் சியை உண்டாக்குகின்றது. மருந்தாகவும் மந்திரமாகவும் விளங்குகின்றது.

'ஓம் நமசிவாய' என்று ஓதி, திருநீறு இட் டுக் கொள்ளும் போது இரு வினைகளும் மாய்ந்து போகின்றன.

இறைவனுக்கு அபிஷேகம் செய்யப் படும் விபூதி, காப்பு அணிவிக்கப்பட்டு பிரசாதமாக வழங்கப்படும். திருநீறு உடலுக்கும், உயி ருக்கும் கவசமாகத் திகழ்கின்றது.

விபூதி புண்ணியர்களும், முனிவர்க ளும், தவசிகளும், யோகிகளும், சித்தர்களும் பூசி மகிழ்வது சத்தியப்பொருளாக, சுந்தர மாக, சிவமாக விளங்குகின்றது.

உடல்நோயையும் மனநோயையும் உயி ரைப்பிடிக்கும் பிறவி நோயையும் போக்க வல்லது திருநீறு.

வானவர்களுக்கும் மேலான நிலையில் இருந்து, தத்துவமாக திகழ்வது; வேதங்க ளால் துதிக்கப்படுவது; ஆகமமாக இருப் பது; துன்பங்களையும், துயரங்களையும், இன் னல்களையும், இடையூறுகளையும், அவ லங்களையும், வருத்தங்களையும், வேதனை களையும் போக்குவதும் இந்தத் திருநீறே... இன்பத்தையும், அமைதியையும், பெருமை யையும், புகழையும் தருவல்லது; பாவங் களை நீக்கி புண்ணியம் சேர்ப்பது; சிறுமை யைப் போக்கி சிறப்பைத் தருவது; மரணத் தை விலக்கி முக்தியைத் தருவது; எண்ணிய எண் ணம் எல்லாம் ஈடேறச் செய்வது; வான லோக இன்பத்தையும் வானலோக வாழ்க்கை யையும் வழங்குவது; ஐம்புலன்களையும் ஒடுக்கி ஆசையை அடக்கும் யோக நிலையை உண்டாக்குவது; எல்லா உலகங்களும் எல் லோரும் அழிந்த பின்னரும் நிலைத்திருப் பது என விபூதி பற்றிக் கூறப்படுகிறது.

எல்லோருக்கும் இறுதி நிலையாக இருப் பது; பகையை வென்று பக்தியைத் தருவது; எல்லோருக்கும் பெரும்பாக்கியமாக இருப் பது; யானையைப் பார்த்த குருடர் போன்றும் அரைகுறையாகப் பகுத்து அறியும் புல்ல றிவை அகற்றி நல்லறிவைத் தருவது; மெய்ஞானத்தை வளர்ப்பது; தேவர்களும் தெய்வங்களும் விரும்பி அணிந்து கொள் வது இந்தத் திருநீறாகும்.

நன்றி ஞானபூமி

வட்டு - தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா
சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய
மஹோற்சவம்
3ஆம் திருவிழா



அல்லல்கள் தீர

[illegible] புகழ் வட்டுநகர் தெக்கணப்பாய் பதியுறை
[illegible] லிங்கப் பெருமான் பெருவிழா காணீர் !
[illegible] ஓசை கேட்கிறது ஒளிவெள்ளம் தெரிகிறது
அல்லல் உறுவினை அகற்ற அங்கே மூழ்குங்கள் !
[illegible] இடமிருக்க மகாலிங்கர் வலமிருக்க
அன்னையை அருகிருத்தி எழுந்தருளும் காட்சி காணீர் !
அரோகரா ஓசை அங்க பிரதிஷ்டை அடியழிக்கும் பாதை
அத்தனையும் காணீர் அல்லல்கள் தீரும்!

நா. அகிலன்

# இன்று ஒரு தகவல்

## காலம் மாறும் !

ஓர் அரசன். அவனுக்கு வயதாகி விட்டது. அதனால் கவலை, பயம் எல்லாம் அதிகமாகிவிட்டது. மரண பயம்! இரவிலே தூங்க முடியவில்லை.

ஏற்கனவே போர்க்களங்களிலே எத்தனையோ பேரை ஓடஓட விரட்டியவன் இந்த அரசன். ஆனால் இப்பொழுது அந்தத் துணிச்சல் எல்லாம் எங்கேயோ போய்விட்டது. ஒரு நாள் அந்த அரசன் எல்லா அமைச்சர்களையும் கூப்பிட்டார்.

எனக்கு ஒரு நல்ல ஆலோசனை சொல்லுங்கள் என்றார். "என்ன ஆலோசனை" என்று கேட்டார்கள்... "எனக்கு ஒரு நெருக்கடியான சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள்... அந்த நேரத்திலே நீங்கள் யாருமே என் பக்கத்திலே இல்லை... ஆலோசனை சொல்வதற்கு!...

அந்தச் சமயத்திலே எனக்கு உபயோகப்படுகிற மாதிரி ஒரு வாசகம்-பொன்மொழி-சொல்லுங்கள்... அதை நான் என் வைரமோதிரத்துக்கு அடியிலே பொறித்து வைத்துக்கொள்வேன்..."

அரசன் போட்டிருந்த மோதிரமும் அதற்குத் தகுந்த மாதிரி திறந்து மூடக்கூடியதாக அமைந்திருந்தது. அமைச்சர்கள் யோசனை செய்தார்கள். என்ன வாசகம் சொல்லலாம் என்று ஒருவருக்கும் ஒன்றுமே சரியாகத் தோன்றவில்லை. குழப்பமாக இருந்தது. அந்த நேரத்திலே ஒரு பெரியவர் அங்கே வந்தார். அவர் சொன்னார் "நான் அதற்குப் பொருத்தமான ஒரு வாக்கியம் சொல்லுவேன்... ஆனால் ஒரு நிபந் தனை..."

யாரும் ஆர்வம் காரணமாக அவசரப்பட்டுப் படித்து விடக்கூடாது. அதை ரகசியமாக மோதிரத்தினுள்ளே பதிந்துவைத்துக்கொள்ள வேண்டும்.

எப்பொழுதாவது இக்கட்டிலே மாட்டிக்கொள்ளும் பொழுது, வேறு வழியே இல்லை என்கிற நிலைமையிலே மட்டும்தான் அதைத்திறந்து பார்க்கவேண்டும்..." என்றார். "சரி" என்று ஒத்துக் கொண்டார்கள். அவர் சொன்ன வாக்கியம் இரகசியமாக மோதிரத்தினுள்ளே பதிந்து மூடிவைக்கப்பட்டது.

கொஞ்ச நாட்களின் பின் அந்த ராஜாவுக்கு ஒரு சோதனை வந்தது. அடுத்த நாட்டு மன்னன் படையெடுத்து வந்தான். அவன் இவரிடம் ஏற்கனவே தோற்றுப் போனவன் ஒரு வெறியிலே வந்தான். ஜெயித்தும் விட்டான்.

போரிலே தோற்ற அரசன் ஒரு குதிரையில் ஏறி தப்பி ஓடினான். ஒரு மலை உச்சிக்குப் போய்விட்டான் அதற்கு மேல் போக முடியாது... பயங்கர பள்ளம்! ஆனால் அரசருக்கு அது சாவுப் பயணத்தின் வாசல்! திரும்பவும் முடியாது... மேலே போகவும் முடியாது...

வேறு வழியே இல்லை... அந்த நேரம் சூரிய ஒளி மோதிரத்திலே பட்டு மின்னியது... உடனே அவருக்கு ஞாபகம் வந்தது. மோதிரத்தைத் திறந்து உள்ளே பொறிக்கப்பட்டிருந்த வாசகத்தைப் படித்தார். அதில் இருந்த வாசகம்:

"இந்த நிலையும் மாறிவிடும்!" (This too will pass Away) இதைப்படித்ததும் அரசருக்கு ஒரு தைரியம் வந்தது. அரசனைத் துரத்திவந்தவர்களும் திசைமாறி வேறு எங்கோ போய்விட்டார்கள்.

அவர்கள் துரத்திக்கொண்டு வராவிட்டால் இவ்வளவு அழகான ஓர் இடம் இருக்கிறதே எனக்குத் தெரியாமல் போயிருக்கும் என நினைத்தார். மன்னர் நாடு திரும்பினார் மறுபடியும் படைகளைத் திரட்டினார். கொஞ்ச நாள் கழித்து தன்னைத் தோற்கடித்த அரசன் மீது படையெடுத்துப் போனார். யாரிடம் தோற்றோடினாரோ அவரை மீண்டும் வெற்றி கொண்டார்.

வரவேற்புவிழா பிரமாதமாக நடந்தது... ஆடல்... பாடல்... ஒரே கோலாகலம்! இதைப் பார்த்ததும் அந்த ராஜாவுக்குத் தலைகால் புரியவில்லை... நம்மை இனி யாராலும் ஜெயிக்க முடியாது என்று நினைத்தார் லேசாக அகம்பாவம் தலை தூக்கியது. மறுபடியும் சூரிய ஒளிபட்டு மோதிரம் மின்னியது... அதைத் திறந்து மறுபடியும் படித்தார்.

"இந்த நிலையும் மாறிவிடும்..." அவ்வளவுதான் அவர் மனம் அடங்க ஆரம்பித்தது.. அகம்பாவமும் மறைந்தது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

எந்தச் சூழ்நிலையிலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை... ஏனென்றால் எதுவுமே நிரந்தரம் அல்ல...! அந்த ராஜா மாதிரி வேறு ஒருவனும் ஒரு மோதிரம் போட்டிருந்தான் அதற்குள் அவன் எழுதிவைத்த வாசகம்-

"எதற்கும் கவலைப்படாதே...!" ஒருநாள் அவன் பயங்கரமான கவலையோடு உட்கார்ந்திருந்தான்... பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள் "இந்த மாதிரி நேரத்திலேதான் நீ உன் மோதிரத்தைத் திறந்து பார்க்க வேண்டும்" என்று .

அவனுக்கு கவலையோடு எரிச்சலும் ஏற்பட்டது. "அது எப்படி முடியும்...? இப்பொழுது திருட்டுப் போனதே அந்த மோதிரம் தானே!" இப்படிச் சொல்லிவிட்டு அவன் மறுபடியும் தலையிலே கையை வைத்தபடி உட்கார்ந்துவிட்டான்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அரச ஊழியர்களின் மீள் சேவைக்கு திருத்தப்பட்ட சுற்று நிருபம்

ஓய்வுபெற்ற அரச ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் சேவைக்கு அமர்த்துவது தொடர்பாக திருத்தியமைக்கப்பட்ட சுற்று நிருபம் ஒன்றை பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ள புதிய திருத்தங்களின்படி ஓய்வுபெற்ற அரசஊழியர் ஒருவரை ஒரு வருடத்திற்கு மாத்திரமே ஒப்பந்த அடிப்படையில் மீள சேவைக்கு சேர்த்துக்கொள்ளமுடியும். மீள் சேவைக்கு அமர்த்தும் பதவிக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுக்க முடியாவிட்டால் மாத்திரமே அவ்வாறான பதவிகளுக்கு மீள் நியமனம் வழங்கமுடியும்.

67 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெற்ற எந்தவொரு உத்தியோகத்தரையும் மீளசேவைக்கு அமர்த்த முடியாது. மீள சேவைக்கு அமர்த்தப்படும் காலத்தில் ஓய்வூதியத்தையும், வாழ்க்கைச் செலவுப்படியையும் பெற்றுக்கொள்ள முடியும். இவர்களுக்கான கொடுப்பனவுகளைப் பொறுத்த மட்டில் செயலாளர்களின் தரத்தில் ஒருவர் மீள சேவைக்கு அமர்த்தப்பட்டிருப்பின் அவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றபோது பெற்ற சம்பளத்தின் ஐம்பது வீதம் அல்லது மாதாந்தம் 30 ஆயிரம் ரூபா இதில் எது கூடியதோ அது சம்பளமாக வழங்கப்படும்.

மேலதிக பணிப்பாளர்நாயகம் இதனையொத்த பதவிகளில் மீள சேவைக்கு அமர்த்தப்பட்டிருப்பின் அவர் சேவையில் ஓய்வு பெற்ற போது பெற்ற சம்பளத்தின் 50 வீதம் அல்லது மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா இதில் எது கூடியதோ அது சம்பளமாக வழங்க முடியும். திணைக்களத் தலைவர் சிரேஷ்ட உதவி செயலாளர் பதவியில் மீள சேவைக்கமர்த்தப்பட்டிருப்பின் இவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற போது பெற்ற சம்பளத்தின் 50 வீதம் அல்லது மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா இதில் எது கூடியதோ அது சம்பளமாக வழங்கப்படும். (அ)

# 4 மீ.தூரத்தை நீந்திக் கடந்தது 15 மாதக் குழந்தை

கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெறும் முயற்சியாக சென்னையைச் சேர்ந்த மஹாரரந்த் கமலாகர் என்ற 15 மாத குழந்தை நீச்சல் குளத்தில் நான்கு மீற்றர் தூரத்தை நீந்தி கடந்தான்.



சென்னை திருவல்லிக்கேணியைச் சேர்ந்த தம்பதி கமலாகர் விஜயலட்சுமி. இவர்களது மகன் மஹாரரந்த் கமலாகர். பிறந்து 15 மாதங்களே ஆன இந்த குழந்தை கடந்த மூன்று மாதங்களாக விஜயலட்சுமியின் தம்பி அருண் பாலாஜியிடம் நீச்சல் பயிற்சி மேற்கொண்டு வருகிறது. நீச்சல் வீரரான அருண் பாலாஜி இலங்கை முதல் இராமேஸ்வரன் வரை உள்ள பாக்கு நீரிணையை குறைந்த நேரத்தில் (10 மணி நேரம் 41நிமிடம்) கடந்தவர்.

குறைந்த வயதில் நீந்தியவன் என கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்க இக்குழந்தை நேற்று முன்தினம் முயற்சித்தான். சென்னையில் இந்த சாதனை முயற்சி நடைபெற்றது. இந்த சாதனை முயற்சியை பார்க்க பலர் அங்குள்ள நீச்சல் குளத்தின்முன் குவிந்திருந்தனர்.

மாலை 4.40 மணிக்கு குழந்தை மஹாரரந்த் கமலாகர் மற்றும் பயிற்சியாளர் அருண் பாலாஜி ஆகிய இருவரும் நீச்சல் குளத்தில் இறங்கினர். முதலில் பயிற்சியாளர் அருண் பாலாஜி குழந்தைக்கு சில பயிற்சிகளை அளித்தார். பின்னர் பயிற்சியாளர் அருண் பாலாஜி, குழந்தை மஹாரந்தை தனியாக விட்டதும். அக்குழந்தை நான்கு மீற்றர் தூரம் நீந்தி நீச்சல் குளத்தின் விளிம்பை தொட்டு கைப்பிடியை பிடித்துக்கொண்டது.

15 மாத குழந்தை நீச்சலடித்ததை பார்த்த பொது மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். பயிற்சியாளர் அருண் பாலாஜி நிருபர்களிடம் கூறுகையில், இந்த சாதனையை கின்னஸ் சாதனைக்கு விண்ணப்பிக்க இருக்கிறோம். மஹாரந்த் நீச்சலடித்த வீடியோ படம் வந்திருந்த முக்கிய பிரமுகர்களின் கையெழுத்து, மஹாரந்த்தின் பிறந்த நாள் சான்றிதழ் ஆகியவற்றை கின்னஸ் அமைப்பிற்கு அனுப்புவோம்.

அவர்கள் சான்றிதழ்களை ஆய்வுசெய்த பிறகு ஒரு கண்காணிப்பாளரை அனுப்புவார்கள். அவர் முன்பாக மீண்டும் மஹாரந்த் நீந்திக் காண்பித்தால் சாதனையை ஏற்றுக் கொள்வார்கள். குறைந்த வயதில் நீந்தியது தொடர்பாக இது வரை யாரும் சாதனை செய்யவில்லை. இது ஒரு புதிய சாதனையாக இருக்கும். பாக்கு நீரிணையை குறைந்த நேரத்தில் கடந்த எனது சாதனையை மஹாரரந்த் முறியடிக்க வேண்டும் என் பதுதான் எனது ஆசை என்றார். (அ-5)

# இராசிபலன்

15.06.2007

(ஆனி 01, வெள்ளிக்கிழமை)

அமாவாசை முற்பகல் 09.40 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 09.53 மணிவரை

இராகுகாலம் 10.23-11.53 மணிவரை

சுபநேரம் 05.53-7.23 மணிவரை

**மேடம்:-** இனியசம்பவம், தடைப்பட்ட காரியம் கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, போசனசுகம்.

**இடபம்:-** விதண்டாவாதம், முயற்சி தாமதம், பண விரயம், ரோகநிலை.

**மிதுனம்:-** வெகுமானம், உஷ்ணநிலை, போசன சுகம், கௌரவமான நிலை.

**கடகம்:-** காரிய அலைச்சல், சயன சுகக்குறைவு, சோம்பல் நிலை, சுபசெலவு.

**சிங்கம்:-** தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, தெய்வதரிசனம், போசனசுகம்.

**கன்னி:-** நிலைமாற்றம், அதிகாரம், பெரியோரால் மதிக்கப்படுதல், தேகநலன்.

**துலாம்:-** உத்தியோக பங்கம், திடீர் பயணம், எதிர்பாராத செலவு, காரியதாமதம்.

**விருச்சிகம்:-** மரியாதைக்குறைவு, காரிய தடங்கல், வீண்பகை, உடல்நலக்குறைவு.

**தனுசு:-** சென்ற இடத்தில் செல்வாக்கு, தெய்வ தரிசனம், முயற்சி பலிதம், தனவருவாய்.

**மகரம்:-** சத்துரு ஜெயம், தொழில் முன்னேற்றம், தெய்வசிந்தை, நல்ல முயற்சி.

**கும்பம்:-** சொத்துப்பிணக்கு, முயற்சி தாமதம், மனச்சோர்வு, ரோகநிலை.

**மீனம்:-** தாய்வழி உறவு, வாகனசுகம், அதிக முயற்சி, சுபசெலவு.

-வளவன்

## அவசர கலந்துரையாடல்

வெளிமாவட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான அவசர கலந்துரையாடல், யாழ்.கல்வி வலயத்துக்கு அருகில் நாளை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## பல்துறைசார் மருத்துவ முகாம்

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்.போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை மற்றும் சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து நடாத்தும் பல்துறைசார் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப.1.00 மணிவரை நடைபெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் சத்திரசிகிச்சை பெண் நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல், புற்றுநோயியல், கண் நோயியல், சயரோகம் மற்றும் சரும நோயியல், சார் மருத்துவர்கள் கலந்துகொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவர். அத்துடன் ஆய்வுகூட பரிசோதனைக்களும் மேற்கொள்ளப்படுமென சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## அதிபர் சேவை நேர்முகப் பரீட்சை

தற்போது யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றுவரும் இலங்கை அதிபர்சேவை வகுப்பு 2 தரம் IIக்கு உள்வாங்குவதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது வெளிமாவட்டங்களில் தங்கியிருப்பவர்கள் இம்மாத இறுதியில் திருகோணமலையில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு யாழில் தோற்ற முடியாமல் வெளிமாவட்டத்தில் இருப்பவர்கள் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனோடு தொடர்புகொண்டு நேர்முகப் பரீட்சைக்கான திகதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஒரு நாட்டில் –அந்நியர் புகுவதைப் போன்ற தீமை–வேறு எதுவும் இல்லை.

– அல்பேனியா

வலம்புரி

# சட்டவிரோத துப்பாக்கிகளை பயன்படுத்துவோருக்கு அபராதம்

(கொழும்பு)

சட்டவிரோதமான துப்பாக்கிகளை பயன்படுத்துவோருக்கு விதிக்கப்படும் அபராதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுடுகலன்கள் தொடர்பான சட்ட விதிகள் மறு சீரமைக்கப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடக அமைச்சருமான அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் மேலும் கூறியதாவது; சட்டவிரோதமான துப்பாக்கிகளை பயன்படுத்தி முதன்முறையாக கைது செய்யப்படுவோருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும்.

அதே குற்றத்திற்காக இரண்டாம் முறை கைதுசெய்யப்படும் போது குறித்த நபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும். புதிய தொழில் நுட்பத்தின் அடிப்படையில் நவீன ரக துப்பாக்கிகள் இப்போது சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்டன் கன், கேஸ் கன்,ஸ்ப்பிரின் கன் மற்றும் எயார் கன் என்பனவே அவையாகும்.இவையும் சுடுகலன்கள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு அனுமதி இன்றி பாவிப்போருக்கு அபராதம் விதிக்கப்படும்.

துப்பாக்கி கட்டளைச் சட்டம் மறு சீரமைப்புத் தொடர்பாக தேசிய் மற்றும் மக்கள் பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த இப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இச் சட்டம் கடைசியாக 1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின் 182 ஆவது பிரிவின் மறு சீரமைப்புத் தொடர்பாகவே இப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

*அமைச்சரவையின் ஏனைய தீர்மானங்கள்;*

இதேவேளை போகம்பர சிறைச்சாலையை இடம் மாற்றம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கான பிரேரணையை சட்டம் மற்றும் நீதி மறுசீரமைப்பு விவகார அமைச்சர் அமரசிறி தொடங்கொட முன்வைத்திருந்தார். இதற்கு ஏற்ப 2007 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள 500 மில்லியன் ரூபா நிதியின் மூலம் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் நிர்மாணப் பணிகள் யாவும் தேசிய பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டப் பணிகள் இவ் வருடம் டிசம்பர் மாதம் அளவில் முடிபடையவுள்ளது.

பெருந்தோட்ட கைத்தொழில் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை அமைப்பதற்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் முன்வைத்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. அரசுக்குச் சொந்தமான காணிகளை மீள் வாடகைக்கு கொடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பான பிரேரணையை பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க முன்வைத்திருந்தார். (ச–5)

# கோத்தபாயவின் குற்றச்சாட்டுக்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம்

(கொழும்பு)

இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஐ.நா.தொடர்பாக தெரிவித்த கருத்துக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் விசனம் தெரிவித்து கடிதம் ஒன்றை எழுத்தியுள்ளது. சில தினங்களுக்கு முன்பு கோத்தபாய ஐ.நாவினுள் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளதாகவும் புலிகள் ஐ.நாவை பிழையாக வழிநடத்துவதாகவும் தெரிவித்திருந்தார். அவரது கருத்தை பி.பி.ஸி.மற்றும் ரொய்ட்டர் ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

இக் குற்றச்சாட்டு ஆதாரம் எதுவும் அற்றது. அண்மைக் காலமாக உதவி நிறுவனப் பணியாளர்கள் மீதான கொடுமைகள்,கொலைகள் அதிகரித்துள்ள நிலையில் பாதுகாப்புச் செயலரின் இக் கூற்று எமது உதவிப் பணியாளர்களின் செயற்பாடுகளையும் உயிர்களையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது எனத் தெரிவித்துள்ள இலங்கைக்கான ஐ.நா.வின் மனிதாபிமானப் பணிகளுக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பணியாளர்கள் ஐ.நா.வின் கடுமையான சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே பணிக்கு அமர்த்தப்படுவதாகவும் அவர்கள் ஐ.நா.வரைமுறைகளுக்கும்,செயலருக்கும் பதில் கூறகடமைப்பட்டவர்கள் என்று தெரிவித்துள்ளார்.

அவர்களின் பணிகள் நடுநிலையான உயர் விழுமியங்களைக் கொண்டவை.அவர்கள் மூன்றாம் தரப்பு யாரினதும் கட்டளைகளுக்கு இணங்குபவர்கள் அல்ல என்றும் தெரிவித்துள்ளார். இலங்கைத் தீவில் பணியாற்றும் ஐ.நாவின் பணியாளர்கள் ஓய்வின்றி பாதிக்கப்பட்ட சமூகங்களுக்காக உதவுவ்தை தாம் கண்ணுற்றதாகவும் அவர்கள் சிறந்த கூட்டுப் பொறுப்புடன் இயங்குவதானல் ஐ.நாவின் உயர்ந்த இலக்குகளுக்காக தொடர்ந்தும் பணியாற்றுவர் என்றும் தெரிவித்த ஐ.நா.அதிகாரி ஐ.நாவின் பணியாளர்களிடையே நல்லிணக்கம்,கூட்டுப் பொறுப்பு விடயத்தில் கேள்விக்கே இடமில்லை என்றார். (ச–5)

# புலிகளின் சர்வதேச பிரசாரராக ரணில் விக்கிரமசிங்க செயற்படுகிறார்

## அமைச்சர் அளுத்கமகே தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மறைந்ததையடுத்து விடுதலைப்புலிகளின் சர்வதேச பிரசாரராக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமங்க செயற்படுகிறார். சில நேரங்களில் ஸ்ரீ கோத்தா புலிகளின் காரியாலயமாக மாறினாலும் புதுமை

மேலும் கூறியதாவது, கொழும்பில் குண்டு வெடிப்பதை தடுப்பதற்கும் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும் பாதுகாப்புப் படையினர் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.புலிச்சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படுவது மற்றும் கடத்தப்படுவது தொடர்பாகவே ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க பேசி வருகிறார்.

# அமெரிக்காவின் தலையீடு விரைவில் சாத்தியமாகலாம்!

இலங்கை இன விவகாரத்தில் அமெரிக்கா தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை அரச சார்பற்ற அமைப்புக்கள் கூட்டாக விடுத்துள்ளன.

சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொண்டலிசா றைசுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிக மோசமாக இடம்பெற்று வருவதை உலக நாடுகள் பலவும் சுட்டிக்காட்டியுள்ளன.

இது தொடர்பில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விவாதமும் இடம் பெற்றுள்ளது. இந் நிலையில் பிரிட்டிஷ் வெளிவிவகார இணையமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்து பிரிட்டிஷ் பிரதமரின் கடிதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்திருந்தார்.

அக் கடிதத்தில் யுத்தத்தில் வெல்ல முடியாது, எனவே விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு எழுதியிருந்தார்.

இவற்றுக்கு மேலாக ஜேர்மன்,பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இலங்கைக்கான நிதியுதவியை நிறுத்தியுள்ளன.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஐரோப்பிய நாடுகளின் உதவி தேவையில்லை எனவும் நாம் அந்த நாடுகளை சார்ந்திருக்கவில்லை எனவும் கூறியதுடன் எமக்கு ஆசிய நாடுகள் உள்ளன என்றும் கூறியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் மேற்போந்த கருத்து சதாம் ஹுசைனின் கருத்துக்கு ஒப்பானது. அதாவது,இலங்கை விடயத்தில் பிரிட்டனோ, அமெரிக்காவோ தலையிட முடியாது. அவர்களுக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்றவாறு அவரின் கருத்து அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகளை தடைசெய்யுமாறு ஐரோப்

விடுதலைப்புலிகளை தடைசெய்யுமாறு ஐரோப்பிய நாடுகளில் பிரசாரம் செய்த இலங்கை, தனது யுத்த நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவிடமும், பிரிட்டனிடமும் ஆயுதம் மற்றும் இராணுவப் பயிற்சிகளை பெற்றுக் கொண்டது.

ஆனால் இப்போது மனித உரிமை விடயத்தில் கவனம் செலுத்துமாறு இலங்கைக்கு அந் நாடுகள் ஆலோசனை கூறும் போது அதனை எதிர்ப்பதுடன் அந் நாடுகளில் நாங்கள் தங்கியிருக்கவில்லை என்ற கதையும் தெரிவிக்கப்படுகிறது.

உதவி தேவைப்பட்ட போதெல்லாம் அமெரிக்காவிடமும் பிரிட்டனிடமும் கையேந்திய இலங்கை இப்போது அந் நாடுகளை தூக்கிஎறிவது அந் நாடுகளை ஆத்திரத்திற்கு ஆளாக்கியுள்ளது.

இதன் ஓர் வெளிப்பாடாகவே இலங்கை இன விவகாரத்தில் அமெரிக்கா தலையிடவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆக, இந்த கோரிக்கையின் அடுத்த கட்ட விளைவு இலங்கை இன விவகாரம் தொடர்பில் அமெரிக்காவின் கண்டிப்பான அதட்டல்களை இலங்கை அரசு சந்திக்கப்போகிறது.

அதற்கும் இலங்கை அரசு அசைய மறுத்தால் அதன் அடுத்தகட்டம் அமெரிக்காவின் நேரடித் தலையீடாகவே அமையும்.

ரணில் விக்கிரமசிங்க செயற்படுகிறார். சில நேரங்களில் ஸ்ரீ கோத்தா புலிகளின் காரியாலயமாக மாறினாலும் புதுமையடைவதற்கில்லை என்று அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் மற்றும் நடத்தப்படுவது தொடர்பாகவே ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க பேசி வருகிறார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நிகழ்ச்சி நிரலைவிடவும் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகிறார். இதனால் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தா கிளிநொச்சியில் உள்ள புலிகளின் காரியாலயமாக மாறினாலும் ஆச்சரியமடைவதற்கில்லை. (ச-5)

## வெள்ளி நற்சிந்தனை ௨௨

# நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மனிதப்பிறவி கிடைத்தற்கு அரிது. 'அரிது அரிது மானுடராதல் அரிது' என ஔவையார் கூறினார். 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என மகிழ்ந்து பாடினார் அப்பர் பெருமான். கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறவியால் பெற்ற யாக்கை பயன்தரும் செயல்களைச் செய்வதற்குப் பயன்படவேண்டும். எனவே அரிதாக எமக்குக் கிடைத்த உடம்பைப்பற்றி நாம் நன்கு அறிந்து செயற்பட வேண்டியுள்ளது.

உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பு நிலையை வள்ளுவர் தெளிவாக விளக்கியுள்ளார்.

'குடம்பை தனித்து ஒழியப் புள் பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு'

பருவம் வந்ததும் முட்டைக்கோது'தனியே இருக்க அதனுள் இருந்த பறவை பறந்து போவதைப் போன்றதே உயிருக்கும் உடலுக்கும் உள்ள நட்பு என்கிறார்.

எனவே உடம்பைக்கொண்டு பயனுள்ள செயல்களை நாம் மிக விரைவாகச் செய்யவேண்டும். அறச்செயல்களை செய்யவேண்டும். நீண்ட காலம் வாழ விரும்புவோர் உடம்பை பேணி வளர்ப்பதிலேயே குறியாக உள்ளனர். இவர்கள் உடம்பு ஏன் எமக்குத் தரப்பட்டது என்பதை உணராதவர்கள்.

உடம்பினால் அறச்செயல்களையே செய்யவேண்டுமென முன்னோர் கருதி வாழ்ந்தனர். கரும்பை நெருக்கி சாறு கொள்ளும்போது அதற்கு மெய்வருத்தம் உள்ளது போல அறச்செயல்களைச் செய்வோருக்கும் பல இடையூறுகள் ஏற்படலாம். அறிவுள்ளவர்கள் இத்தகைய மெய் வருத்தங்களை தமது அறிவினால் தள்ளிவிடுவார்கள். முயற்சியால் நல்லறம் செய்து மகிழ்வர். கரும்பின் சாறு சுவை பயப்பது போல பலருக்கும் பயன்பட அறஞ் செய்வர்.

கரும்பின் கோதுபோல கழிந்து போகும் யாக்கையை நிலை என்று நம்பாமல் விரைவில் அறஞ்செய்வதே நல்லது. யாக்கையை வளர்த்து மறஞ்செய்பவர் இதனை மனங்கொள்ள வேண்டும். உடம்பை பூதம்போல வளர்ப்பதால் பயனில்லை. அது நீண்டகாலம் நிலைத்து நிற்காது. மெய்வருந்தி அறஞ் செய்து பிறரை மகிழ்விப்பதற்காகவே இந்த உடம்பு எமக்குக் கிடைத்தது என்ற உண்மையை நாம் உணரவேண்டும். இக் கருத்தை நாலடியாரில் உள்ள பாடல் ஒன்று உணர்த்தியுள்ளது. அதை நாமும் உணர்ந்து செயற்படுவதே நன்று.

'அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க-கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு'

(நாலடியார் ;34)

## ஜெனீவாவில் ஜனாதிபதிக்கு வரவேற்பு

(ஜெனீவா)

சர்வதேச தொழிலாளர்களின் 96 -வது வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜெனீவா சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான தூதுக் குழுவினருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி எஸ்.பீ.எம்.லொரென்ஸோ, ஜெனீவாவுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் தயான் ஜெயதிலக்க ஆகியோர் விமான நிலையத்திற்கு வந்து இவர்களை வரவேற்றனர். (ச-5)

## யுத்த நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்தால்...

என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறித்துக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கையைப் பயமுறுத்தும் வகையில் நடந்து கொள்வதாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய தெரிவித்துள்ளார்.

எமது கொள்கைகளின் பிரகாரம் பாதுகாப்புச் செயலாளரின் கூற்றை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அரசாங்கம் அவ்வாறு தெரிவித்தாலும் செயற்பாட்டு ரீதியில் சர்வதேச நாடுகளுக்கு அடிபணிந்த நிலையிலேயே செயற்படுகின்றது.

இதனை எம்மால் உறுதியாகக்கூற முடியும். காரணம் போர் நிறுத்த உடன்படிக்கை தற்போது செயலிழந்துள்ளது. ஆனால் காகித மட்டத்திலுள்ள போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்ய அரசாங்கம் ஏன் தயங்க வேண்டும்?

அதாவது போர்நிறுத்தஉடன்படிக்கையை ரத்துச் செய்தால் சர்வதேச சமூகத்தின் ஆதரவினை இழக்க வேண்டி வரும் என்று அரசாங்கம் கருதுகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் கூறுவது போன்று அரசாங்கம் சர்வ தேச நாடுகளில் தங்கியிருக்கவில்லை என்றால் போர் நிறுத்தஉடன்படிக்கையை உடனடியாக ரத்துச்செய்யலாமே?

அரசாங்கம் அமெரிக்காவுடன் செய்து கொண்டுள்ள பாதுகாப்பு உடன்படிக்கை மறைத்து வைக்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் முழுமையான உள்ளடக்கம் இதுவரை நாட்டுக்கு வெளிப்படுத்தப்பட வில்லை.

நாடாளுமன்றத்திற்கு ஒரு சில விடயங்கள் மட்டுமே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே அமெரிக்காவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை உடனடியாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துமாறு அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

சர்வதேச நாடுகளின் நிபந்தனைக்கு அடிபணிய மாட்டோம் என்று அரசாங்கம் கூறுமானால் அதனை நாங்கள்வரவேற்கின்றோம். ஆனால் அரசாங்கம் இவ்வாறு கூறினாலும் செயற்பாட்டு ரீதியில் சர்வதேச நாடுகளுக்கு அடிபணிந்தே செயற்படுகின்றது.

முடியுமானால் சர்வதேச நாடுகளின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதனை செயற்பாட்டு ரீதியாக அரசாங்கம் நிரூபிக்கட்டும் பார்க்கலாம் என்றார். (ச-5)

## சர்வதேச நிறுவனப் பணியாளர்...

வில்லை.

அதனால் அவர் மீது துப்பாக்கிச் சூடுநடத்தப்பட்டது. கடற்படை முகாமுக்கு அண்மித்த பகுதிக்கு யாரும் வரவேண்டாம் என்று நாம் எச்சரித்திருந்தும் அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை.

இதனால் நாம் வருந்தவில்லை. அதிர்ஷ்டவசமாக காயங்களுடன் அவர் உயிர் தப்பி விட்டார். இது எங்கள் தவறு அல்ல. அவர் நலமுடன் உள்ளார் என்றார் அவர்.

திருகோணமலை நகரிலிருந்து 2 கிலோமீற்றர் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள அலெஸ் தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

திருகோணமலையில் மெர்சி கோர்பஸ் நிறுவனத்தின் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளில் அவர் ஈடுபட்டிருந்தார் என்று மெர்சி கோர்பஸ் பேச்சாளர் இவெட்டா ஓவ்ரி தெரிவித்துள்ளார். திருகோணமலை மருத்துவமனையில் முதலில் அனுமதிக்கப்பட்ட அந்தோனியோ மகாலக்ஸ் அதன் பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இச்சம்பவம் உப்புவெளி பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் நிகழ்ந்துள்ளது. (ச-5)

## செஞ்சிலுவைச் சங்கப்...

சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்உப தலைவர் ஜக்கூஸ் போஸ்ரெர் மற்றும் செயலாளர் நாயகம் மார்க்கு நிசகலா ஆகியோரை ஜனாதிபதி சந்தித்துப் பேசினார். இதன் போது தமது பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கூடிய விரைவில் விசாரணைகளை நடாத்தி நீதி மன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு அவர்கள் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டனர்.

இலங்கையில் மனிதாபிமான வேலைகள், தேவைகள் என்பன அதிகளவில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அவற்றை அரசு உறுதிப்படுத்த வேண்டும். அதன்மூலமே மக்கள் மதிக்கப்படுவார்கள் என செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டனர். (ச)

## சர்வதேச நாடுகள் அனைத்தும்...

இது தொடர்பில் அனைத்துலக செய்தி நிறுவனமான ரொய்ட்டர் வெளியிட்டுள்ள செய்தி ஆய்வு விபரம் வருமாறு,

இலங்கையில் தமிழ் மக்கள் நாடு கடத்தப்படுகின்றனர். படுகொலை செய்யப்படுகின்றனர்.இச் சம்பவங்களுக்கு அரச படையினர் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், உதவி நிறுவனங்கள் போன்றவை தமது பணிகளைமேற்கொள்ள முடியாது தடுக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். உள் நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில் அதன் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

இலங்கைக்கு சர்வதேச உதவிகள் தேவை. ஆனால் அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள் அதனை தனிமைப்படுத்தும் நிலைக்குத் தள்ளியுள்ளதாக இராஜதந்திரிகளும் ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியாவும் அமெரிக்காவும் மனித உரிமை மீறல்களைக் காரணம் கூறி இந்த ஆண்டு இலங்கைக்கான சில உதவிகளை நிறுத்தியுள்ளன. இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக மீள் குடியமர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக உணவு உதவிகளை உலக உணவுத் திட்டம் நிபந்தனையாகப் போட்டுள்ளது.

இருந்தபோதும் பலதாக்குதல் சம்பவங்களுக்கு விடுதலைப்புலிகள் மீதும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டியது மிக மிக அவசியமானது என பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் ஹிம் ஹாவெல்ஸ், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் இந்த வாரம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனிமைப்படுத்தப்படக் கூடாது என்பதனையே நாம் எல்லோரும் விரும்புகின்றோம். எனினும் நாம் அதனை நோக்கித் தள்ளப்படுகின்றோம். இதனைத் தடுப்பதற்கோ அல்லது மாற்றுவதற்கோ எந்த வழியும் இல்லை.

கடத்தல்கள், மனித உரிமை மீறல்கள் என்பன நிறுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களை கொழும்பிலிருந்து அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட யுத்திகள் மீண்டும் பின்பற்றப்படக் கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தங்குவதற்கான தகுந்த காரணங்களைக் கொண்டிருக்கவில்லை என குற்றஞ்சுமத்தி கடந்த வாரம் கொழும்பிலுள்ள 400 தமிழ் மக்களை அரசு வேறு பகுதிகளுக்குப் பலவந்தமாக அனுப்பியிருந்தது.

எனினும் உயர் நீதிமன்றத்தின் தடையுத்தரவு அதிகாரிகளை தமது முடிவுகளை மாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளியிருந்தது. நூற்றுக்கணக்கான கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இதற்கு இருதரப்பும் ஒருவரையொருவர் குற்றஞ்சுமத்தி வருகின்றனர். இந்த அறிக்கைகள் போலியானவை எனவும் அது அரசுக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதுடன், அதனுடன் படையினருக்கு உள்ள தொடர்பையும் அவர் மறுத்துள்ளார்.

பயங்கரவாதத்தைக் கையாள்வது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புக்களிலிருந்து அரசு தனது எல்லையை முற்றுமுழுதாகத் தாண்டியுள்ளதாக தேசிய சமாதானச் சபையைச் சேர்ந்த ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்திலிருந்தும் உள் நாட்டிலும் அரசு சுயமாகவே தனிமைப்பட்டுள்ளது. எனினும் சர்வதேச சமூகம் தம்மை வற்புறுத்துவதாக அரசு அதிருப்தியடைந்துள்ளது.

மனித உரிமை மீறல்தொடர்பில் மேற்குலக நாடுகள் இரட்டைப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களைச் சமாளிப்பதற்குத் தமிழ் மக்களைக் கொழும்பிலிருந்து வெளியேற்றியது சிறந்த நடவடிக்கை எனவும் ஜனாதிபதியின் சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.ஸி. மற்றும் ரொய்ட்டர் செய்தி நிறுவனங்களுக்கு மிகவும் பலப்படுத்தப்பட்ட தமது அலுவலகத்திலிருந்தவாறு நேர்காணல் வழங்கும் போது தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த வாரம் அரசுக்கு மற்றுமொரு அதிர்ச்சி தரும் விடயம் நிகழ்ந்துள்ளது. மனித உரிமை மீறல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பாக அரசின் விசாரணைகள் சர்வதேச தரத்தில் நடைபெறவில்லை என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர் குழுவினர் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

கடந்த வருடத்தில் மட்டும் நடைபெற்ற வன்முறைகளில் 4 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளனர். இலங்கையிலுள்ள அமைச்சர்களும் மூத்த அதிகாரிகளும் ஒருவருக்கொருவர் முரணான தகவல்களை உள்ளூரிலும் சர்வதேசத்திலும் தெரிவித்து வருவதனால் நாடு மேலும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது.

இதில் கடும்போக்கான அரசியல் கட்சிகள், பௌத்த குருமார்கள் போன்றவர்களும் அடங்குவர் என இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள்இலங்கையைக் கைவிட வேண்டிய நிலையும் ஏற்படலாம் என தனது பெயரைக் குறிப்பிடாத கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தெரிவிக்கப்படும் பல முரணான கருத்துக்களினால் நாட்டில் வெளிவிவகாரக் கொள்கையில் முற்றிலும் தெளிவற்ற தன்மை ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் தொடர்ச்சியாக ஒருவருக்கொருவர் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

உள்ளூரில் ஒரு செய்தியும் அனைத்துலகத்திற்கு பிறிதொரு செய்தியும் தெரிவித்து வருவது ஆபத்தானது. அதுவே அவர்களைத் தனிமைப்படுத்தும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

மாக உணவு உதவிகளை உலக உணவுத் திட்டம் நிபந்தனையாகப் போட்டுள்ளது.

இருந்தபோதும் பலதாக்குதல் சம்பவங்களுக்கு விடுதலைப்புலிகள் மீதும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. இலங்கையில் மனித

காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இதற்கு இருதரப்பும் ஒருவரையொருவர் குற்றஞ்சுமத்தி வருகின்றனர்.

திலிருந்தவாறு நேர்காணல் வழங்கும் போது தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த வாரம் அரசுக்கு மற்றுமொரு அதிர்ச்சி தரும் விடயம் நிகழ்ந்துள்ளது. மனித உரிமை மீறல்கள் மற்றும் படு

உள்ளூரில் ஒரு செய்தியும் அனைத்துலகத்திற்கு பிறிதொரு செய்தியும் தெரிவித்து வருவது ஆபத்தானது. அதுவே அவர்களைத் தனிமைப்படுத்தும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

## இலங்கையில் மனித உரிமை மீறல்கள் ...

இச் சந்திப்பின்போது இலங்கையில் சீரழிந்துவரும் மனித உரிமைகள் தொடர்பாகவும் இதில் சர்வதேச சமூகம் எவ்வாறு தலை யிடலாம் என்பது குறித்தும் விவாதிக்கப்பட் டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அம்மஸ்ரி அமைப்பின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார். அச் சந்திப்பின் போது இலங்கையில் சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களின் பிரசன்னத்தை அம்மஸ்ரி வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் நடைபெற்று வரும் நிகழ்வுகள் குறித்து அம்மஸ்ரி மிகுந்த அதிருப்தியை வெளியிடுமெனக் கூறப்படுகின்றது. இதன் போது மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க சர்வதேசத்தின் பிரதிநிதிகள் அவசியம் தேவை என்றும் அம்மஸ்ரி வலியுறுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஸ்தாபனமும் மக்களின் இடம்பெயர்வு குறித்துத் தமது ஆழ்ந்த கவலையை வெளிப் படுத்தியுள்ளது. இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதனையே அவ் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ச–3)

## ரெலிக்கொம்மின் பங்கு...

வேண்டும் என்றும் அமைச்சரவைச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

தலைமை நீதிபதி சரத் என் சில்வா, கலீல் மர்சூக், காமினி நிமால் அமரதுங்க ஆகியோர் அடங்கிய குழு இந்த வழக்கை விசாரித்தது. இந்த வழக்கில் 28 பேர் பிரதிவாதிகளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் குறித்து கடந்த மே 15 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர நாடாளுமன்றில் விவாதம் நடத்த வலியுறுத் தினார்.

இதனைத்தொடர்ந்து ஜூன் 8 ஆம் திகதி விவாதம் நடந்தபோது பேசிய அமைச்சர் றஞ்சித்சியம் பலாப்பிட்டிய தொலைத் தொடர்புப் பங்குகள் விற்பனையில் எதுவித திரை மறைவு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அரசாங்கத்திற்கு எதுவித இழப்பும் இல்லை என்று தெரிவித்திருந் தார். (ச–5)

## வெளிமாவட்ட ஆசிரியர்...

போராட்டத்தை நிறுத்துமாறும் குறித்த ஆசிரியர்களின் கோரிக்கை நிறைவேற்ற தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் இராணுவத்தினர் அளித்த உறுதிமொழியையடுத்தே இம்மறியல் போராட்டம் நிறுத்தப் பட்டுள்ளது.

இதற்கமைய கல்வி அமைச்சு ஊடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளிப்பதற்கு குறித்த ஆசிரியர்களுக்கு ஏற்பாடு செய்து தருவதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜெனீவாவிலிருந்து நாடு திரும்பியவுடன் இவ் ஏற்பாட்டைச் செய்து தருவதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த இரு வார காலமாக தடைப்பட்டிருந்த யாழ். வலயக் கல்வித் திணைக்களம், மறியல் போராட்டம் கைவிடப் பட்டமையால் இன்று பணிகள் வழமைக்குத் திரும்பும் எனத் தெரிவிக்கப் பட்டது. (ச–5)


# புதிய பிரிவுகள் ஆரம்பம்

**aat (SriLanka)**

**Foundation level, Intermediate level & Final**

Exam:-Dec 2007 — ஆரம்பம்:- 17.06.2007 (Sunday)

G.C.E.(O/L) 6 PASSES — Medium:- English & Tamil

வார நாள் வகுப்புக்கள், வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

❖ GCE A/L மாணவர்கள் தற்போது பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் A/L பரீட்சை முடிந்தவுடன் விசேட வகுப்புக்கள் நடாத்தப்பட்டு Dec 2007 பரீட்சை எடுக்க வசதி செய்து கொடுக்கப்படும்.

## வங்கியியல் கற்கைநெறிகள்

**ACBF, CBF**

ஆரம்பம்:- 17.06.2007 (Sunday)

# External Degree

GAQ, BA, 1st in Com, BA final

வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள், மீட்டல் வகுப்புக்கள் இடம் பெறுகின்றது.

Further Details
Director
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road,
*(Near Commercial Bank)*
Jaffna.
T/P no:-021 222 3382

(C-164)



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.